## வேளாண்மை

### தேயிலை


1984 இல் 2,080 இலட்சம் கிலோகிறும்களாக மதிப்பிடப்பட்ட தேயிலை உற்பத்தி முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் சாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக 287 இலட்சம் கிலோகிறும் அல்லது 16 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. உற்பத்தியில் ஏற்பட்ட இம் முன்னேற்றமானது அனைத்து உயர வகைகளிலும் காணப்பட்டது. முழுமை நியதிகளில் ஆகக்கூடிய அதிகரிப்பு (115 இலட்சம் கிலோகிறும்) உயர் நிலப் பிரதேசங்களில் காணப்பட்டது.

தாழ்நில, இடைநிலப் பிரதேசங்கள் முறையே 110 இலட்சம், 62 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களை அறிவித்தன. தற்காலிகத் தரவுகளின்படி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் முகாமைப்படுத்தப்படும் பெருந்தோட்டங்களின் உற்பத்தி (வாங்கிய இலையிலிருந்து கிடைத்த உற்பத்தி நீங்கலாக) முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 99 இலட்சம் கிலோகிறும்களினால் (15.8 சதவீதம்) அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களினால் முகாமைப்படுத்தப்படும் பெருந்தோட்டங்களின் உற்பத்தி 36 இலட்சம் கிலோகிறும்களினால் (6.7 சதவீதம்) அதிகரித்தது. இவ்வாறு இவ்விரு வகையான உற்பத்தியாளர்களிலும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை ஏறக்குறைய நாலில் மூன்று பங்கு அதிகரிப்பிற்கு வகை கூறியது. தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் தேயிலை உற்பத்தி முந்திய ஆண்டினுடன் ஒப்பிடுகையில் 1984 இல் 98 இலட்சம் கிலோகிறும்களால் அல்லது 25 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், தனியார்துறையில் உற்பத்தி செய்யப்பட்டு, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனம் என்பவற்றுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் பதனிடப்பட்ட பச்சைக் கொழுந்துகளைத் தனியார் துறையில் உள்ளடக்கின் மொத்த உற்பத்தியின் அதிகரிப்பில் இத்துறையின் சார்பு ரீதியான பங்கு 147 இலட்சம் கிலோகிறும்களாக அல்லது 51 சதவீதமாக அமையும்.

தேயிலைத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1984 இல் 1983 இனைவிட 21,700 மெற்றிக் தொன்கள் அல்லது 19 சதவீதத்தினால் அதிகரித்தன. பெரும்பாலும் ஆண்டின் முதல் அரைப்பகுதியிலேயே ஏற்பட்ட இவ்வதிகரிப்பு சிறந்த காலநிலை நிலைமைகள், தேயிலை விலைகளின் அதிகரிப்பு ஆகிய இரண்டினதும் ஒன்று சேர்ந்த விளைவாகும். கிடைக்கக் கூடியதாயுள்ள தரவுகளின்படி வளமாக்கி வழங்கல்களின் அதிகரிப்பில் தனியார் துறையின் பங்கு அரசதுறைத் தோட்டங்களினதைவிடக் கூடியதாகவுள்ளது.

தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு 1984 இல் 2,190 எக்டேயர்களினால் வீழ்ச்சியடைந்தது. அரசதுறையின் நிலப்பரப்பு அதிகரிப்பைக் காட்டியது. எனினும் இது தனியார்துறையின் நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியினை ஈடுசெய்யக்கூடிய அளவிற்குப் போதுமானதாக இருக்கவில்லை. 1984 இல் மீள் நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்புப் பற்றிய நிறைவான தரவு இன்னும் கிடைக்கக்கூடியதாகவில்லை. எனினும், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகள், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றிலிருந்து கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவுகளின்படி அவர்களால் முகாமைப்படுத்தப்படும் தோட்டங்களின் நிலப்பரப்பு முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 34 சதவீதத்தினாலும் (149 எக்டேயர்கள்) 36 சதவீதத்தினாலும்

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

(177 எக்டேயர்கள்) அதிகரித்துள்ளது. மீள்நடுகையில் ஏற்பட்ட இம்முன்னேற்றத்திற்கு இந்நிறுவனங்களின் முன்னேற்றகரமான நிதி நிலைமையும் சாதகமான காலநிலை நிலைமைகளும் வகை கூறுகின்றன.

### அட்டவணை 1.11
### தேயிலைப் புள்ளி விபரங்கள் 1982 — 1984

| விடயம் | அலகு | 1982 | 1983(அ) | 1984(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கிறும்கள் | 187.8 | 179.3 | 208.0 |
| 1.1. உயர்நிலம் ... | ,, | 71.7 | 67.8 | 79.3 |
| 1.2. மத்திய நிலம் ... | ,, | 51.6 | 48.4 | 54.6 |
| 1.3. தாழ்நிலம் ... | ,, | 64.5 | 63.1 | 74.1 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு ... | '000எக்டேயர்கள் | 242 | 230 | 228 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ.தொன்கள் | 102.7 | 115.5 | 137.2 |
| 4. மீளப்பயிரிடல் ... | எக்டேயர்கள் | 2,004 | 1,367 | வி. இ |
| 5. விலைகள் ... | | 22.52 | 36.96 | 46.45 |
| 5.1. கொழும்பு தேறிய ... | ரூபா/கி.கி. | 35.03 | 52.52 | 77.20 |
| 5.2. ஏற்றுமதி க. எ. பெ. ... | ,, | 22.68 | 26.37 | 34.00 |
| 6. உற்பத்திக்கான செலவு ... | ,, | 181.0 | 157.8 | 204.0 |
| 7. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 6,342.0 | 8,295.0 | 15,764.0 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் ... | (ரூ. ப. இ.) | (276) | (330) | (604) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | (சிஎஉ. ப. இ.) | 4.7 | 4.9 | 7.0 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.
குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.

1984 ஒற்றோபரில் இறப்பர் நிலங்களில் தேயிலையை நடுவதற்கான உதவு தொகை ஒரு எக்டேயருக்கு ரூ. 11,740 இலிருந்து ரூ. 25,000 இற்கு உயர்த்தப்பட்டது. அரசதுறைப் பெருந்தோட்டங்களிலான நீண்டகால முதலீடுகள் அரச ஆதரவிலான முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமாக ஊக்குவிக்கப்பட்டதன் காரணமாகத் தோட்டங்களுக்கான உதவுதொகைத் திட்டங்கள் 1984 நவெம்பரில் இல்லாமல் செய்யப்பட்டது. எனினும் தனியார் துறையின் நிலங்களுக்கான உதவுதொகை தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளது.

தயாரிக்கப்பட்ட தேயிலையின் சராசரி உற்பத்திச் செலவு 1984 இல் கிலோகிறும் ஒன்றிற்கு 29 சதவீதத்தினுல் அதிகரித்து ரூ. 34.00 ஆக விளங்கியது. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசதுறைப் பெருந்தோட்டங்களின் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு 24—29 சதவீதங்களுக்கிடையில் அமைந்தது. இது பெரும்பாலும் 1984 ஏப்பிறலில் தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்பட்ட கூலி உயர்வினுல் ஏற்பட்டதாகும். சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) கிலோகிறும் ஒன்றுக்கு ரூ. 52.52 இலிருந்து ரூ. 77.20 இற்கு 47 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதன் விளைவாக சராசரி உற்பத்தியாளர் இலாபமட்டம் உற்பத்திச் செலவு அதிகரித்தபோதிலும் 11 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனுல் இது மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளின் தோட்டங்களில் ஏற்பட்ட 19 சதவீத வீழ்ச்சியிலிருந்து அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன தோட்டங்களில் ஏற்பட்ட 6 சதவீத உயர்வு வரை வேறுபட்டது. தனியார் துறையில் இலாப மட்டங்கள் அரசதுறையினைவிட மேலாகப் பேணப்பட்டது.

உயர்ந்த தேயிலை விலைகளுடன் இணைந்த உயர்வான உற்பத்தியானது அரச, தனியார் துறை இரண்டினதும் உற்பத்தியாளர்களின் நிதி நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தின. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் வங்கித் தொழில் அமைப்புடனான தமது பொறுப்புக்களைக் கணிசமாகக் குறைக்கவும், வைப்புக்களைக் கூட்டவும் கூடியதாக இருந்தன. முன்னேற்றமடைந்த நிதி நிலைமையானது அவர்கள் தமது மூலதனச் செலவு நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டவாறு தொடர்ந்து மேற்கொள்ள உதவியது. சிறு உடைமையாளர்களையும் உள்ளடக்கிய தனியார் துறை உற்பத்தியாளர்களும் தேயிலை நிலங்களின்மீது தமது குறுங்கால முதலீடுகளை அதிகரித்தனர்.

விலைகள் முன்னேற்றமடையும்போது கூலிகளை அதிகரிக்கும்படி அரச துறையின் முகாமைத்துவத்தினை வற்புறுத்துவதும் அதிகரிக்கின்றது. எனினும் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு ஒரு தற்காலிக நிகழ்வே ஆதலால் நீண்ட காலத்தில் சிறந்த கூலிகளைப் பேணும் பொருட்டு தொழிலாளரின் உற்பத்தியியலளவினை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

சிறு உடைமையாளர்களும் உயர்ந்த விலைகளினால் பயனடைந்துள்ளனர். தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபைகளினால் முகாமைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளினால் பச்சைக் கொழுந்துகளுக்குச் செலுத்தப்பட்ட தொகை 1984 இல் சராசரியாக 20 சதவீதத்தினால் ஏறக்குறைய உயர்வடைந்தது.

தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை கினிதும தேர்தற் தொகுதியில் மூன்று புதிய தொழிற்சாலைகளைத் திறந்ததுடன் கண்டி, பதுளை மாவட்டங்களிலிருந்து முறையே இரண்டு தொழிற்சாலைகளைக் கையேற்றது. இதனால் ஆண்டு முடிவில் தேயிலை சிறு உடைமையாளர் அமைப்பு மேலாண்மைச் சபை நாட்டில் 14 தொழிற்சாலைகளை நடாத்தியதுடன் இவற்றில் பெரும்பாலானவை தாழ்நிலப் பிரதேசங்களில் அமைந்திருந்தன. விரிவாக்கம், வளமாக்கிப் பங்கீடு, சந்தைப்படுத்தல், சிறு உடைமையாளரை உற்பத்தியாளர் அமைப்புக்களை உருவாக்கல் போன்றவற்றிற்குக் கவனம் செலுத்துவதன் மூலம் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை மேலும் சிறப்படையலாம்.

இவ்வாண்டில் தேயிலை ஏற்றுமதி வரி அமைப்பு முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இதுவரை நிலவிய ஒரே சீரான வீத முறைகளுக்கு எதிராக 1984 சனவரியில் இரட்டைத் தேய்வு வரிவீதமுறை தேயிலை மீதான பெறுமான விகித வரி தொடர்பாகப் புகுத்தப்பட்டது. இப்புதிய முறையின் கீழ் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 28.00 இற்கு மேலான மொத்த ஏல விலையின் முதலாவது வரியிடத்தக்க துண்டாகிய ரூ. 27.00 இல் 50 சதவீத வரிவீதமும் ரூ. 55.00 இற்கு மேற்பட்ட மீதிக்கு 40 சதவீதமும் வரி விதிக்கப்பட்டது. இத்திருத்தங்கள் விலையதிகரிப்புகளினால் உற்பத்தியாளருக்குக் கிடைத்த எதிர்பாராத இலாபங்களைக் கவரும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டன. 1984 நவெம்பரில் வரி விதிக்கத்தக்க விலைமட்டம் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 28.00 இலிருந்து ரூ. 32.00 இற்கு உயர்த்தப்பட்டு இக்குறிப்பிட்ட விலைக்கு மேலான விலைக்கு ஒரே சீரான 50 சதவீத வரிவீதம் புகுத்தப்பட்டது. உறையிலிடப்பட்ட தேயிலை நீங்கலான எல்லாத் தேயிலைகள்மீதுமான குறிப்பிட்ட தீர்வை 1984 நவெம்பரில் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 2.00 இனால் குறைக்கப்பட்ட வேளையில் உறையிலிடப்பட்ட தேயிலையைப் பொறுத்தவரை குறைப்பு ஒரு கிலோகிராமுக்கு 50 சதமாக

விளங்கியது. தனியார் துறையின் தேயிலை நிலங்களுக்கு வேண்டிய உதவுதொகை நிகழ்ச்சித் திட்டங்களுக்குக் கூடிய நிதி வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு தேயிலைக் கைத்தொழிலுக்கான அபிவிருத்தி வரி கிலோகிரும் ஒன்றுக்கு ரூ. 1.25 இலிருந்து ரூ. 1.50 இற்கு 25 சதத்தினல் அதிகரிக்கப்பட்டது.

தேயிலைக்கான ஏற்றுமதித் தீர்வை மீளளிப்புத் திட்டமும் இவ்வாண்டில் திருத்தியமைக்கப்பட்டது. கூட்டப்பட்ட பெறுமதி வடிவிலான தேயிலையின் ஏற்று மதிக்குக் கூடிய ஊக்கமளிக்கும் பொருட்டு 1984 சனவரியில் உறையிலிடப்பட்டதும் பைகளிலிடப்பட்டதுமான தேயிலை மீதான தீர்வைக் கழிவு 5 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டது.

அரசிற்குச் சொந்தமான தேயிலைப் பெருந்தோட்டங்களின் ஆற்றலை முன்னேற்றும் அரசின் முயற்சி இவ்வாண்டில் மேலும் கூடுதலாக அதிகரித்தது. தேயிலைப் புத்தாக்க செயற்றிட்டம்–I ஒன்றிணைக்கப்பட்ட தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம், தேயிலைப் புத்தாக்கப் பன்முகப்படுத்தல் செயற்றிட்டமும் ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்துமிருந்ததுடன் நடைமுறையிலுள்ள அரசதுறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினல் உள்ளடக்கப்படாத அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இடைக்கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டது. இவ்வைந்து ஆண்டு நிகழ்ச்சித் திட்டம் (1985–1989) உலக வங்கியினல் ஓரளவிற்கு நிதியிடப்படும். இந்நிகழ்ச்சித் திட்டம் மொத்தமாக 7,000 எக்டேயர்கள் புதிய, மீள்நடுகைத் தேயிலையின் கீழ்க்கொண்டுவருவதனையும், இடையிடையே பயிர் நடும் வீதத்தினைக் கணிசமாகத் துரிதப்படுத்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டது. மேலும், இது மண் பாதுகாப்பினை முன்னேற்றுதல், தொழிற்சாலையை நவீனப்படுத்தல், தோட்டத் தொழிலாளரின் நலத்துறை, நலப்பணிகள் என்பவற்றுக்கும் இடமளிக்கின்றது.

தேயிலை விலைகளின் உறுதியற்ற தன்மையினையும் இக்கைத்தொழிலில் குறுங்கால நீண்டகால முதலீடுகளை மேற்கொள்வதனல் ஏற்படும் நிலையான பாதகமான விளைவினையும் கருத்திற் கொண்டு அரச தேயிலைத் துறைக்கு சமநிலைப்படுத்தும் நிதியத்தினை நிறுவுவதற்கு உத்தேசித்தது. நீண்டகாலச் சராசரி விலையினை ஏல விற்பனை விலை விஞ்சுமிடத்து முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகையினைத் திறைசேரி நிதியத்திற்கு உதவும். உற்பத்தியாளர்கள் தமது முதலீடுகள் மீது நியாயமான வருமானத்தைப் பெறமுடியாத ஒரு மட்டத்திற்கு ஏல விற்பனை விலை வீழ்ச்சியடைகையில் இந்நிதியம் உற்பத்தியாளருக்கு மீளளிப்பினைச் செய்யும். முன்மொழியப்பட்டுள்ள இந்நிதியம் 1985 இல் நடைமுறைக்கு வரும்.

## இறப்பர்

1984 ஆம் ஆண்டின் இறப்பர் உற்பத்தி1,420 இலட்சம் கிலோகிரும்கள் என தற்காலிகமாக மதிப்பிட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 இலட்சம் கிலோகிரும்கள் அல்லது 1.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இவ்வதிகரிப்பு முழுவதும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையாலும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுலும் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களிலேயே ஏற்பட்டது. முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சாதகமான செயலாற்றத்திற்கு மாருகத் தனியார்துறையின் உற்பத்தி 3 சதவீதத்தினல் (25 இலட்சம் கிலோகிரும்கள்) வீழ்ச்சியடைந்தது. தனியார் துறையின் உற்பத்தி

யில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு இவ்வாண்டுக் காலத்தில் பாலெடுத்தலின் கீழ்க் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்புக் குறைவாகவிருந்தவேளையில் அரச துறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியவற்றின் இணைந்த விளைவே காரணமாகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1984 ஆம் ஆண்டுக் காலத்தில் பிடுங்கப்பட்ட நிலப்பரப்பு 6 சதவீதத்தால் அதிகரித்து மொத்தமாக 6,070 எக்டேயர்களாக அதிகரித்த வேளையில் பாலெடுத்தலின் கீழான மொத்த நிலப் பரப்பு 1,514 எக்டேயர்களால் அல்லது 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், எக்டேயரொன்றிற்கான சராசரி விளைச்சல் 821 கிலோகிரும்களி லிருந்து 840 கிலோகிரும்களுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டுக் காலத்தில் மொத்த உற்பத்தியில் பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் தோன்றிய பாதகமான தாக்கம் விஞ்சும் வீதத்தில் எதிரீடு செய்யப் பட்டது. 1982 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்தும் சராசரி விளைச்சல் அதிகரித்துச் செல்லும் போக்கினை எடுத்துக் காட்டியபோதும் இது மிக அண்மையில் 1978 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட எக்டேயர்கள் ஒன்றிற்கான மிக உயர்ந்த மட்ட விளைச்சலான 845 கிலோகிரும்களுக்கு மிகக் கீழேயே இருக்கின்றது.

இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1982 ஆம் ஆண்டிலிருந்தும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கினையே காட்டுகின்றது. 1984 ஆம் ஆண்டுப் பகுதியில் இத்துறைக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 23,500 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 26 சதவீதம் (4,900 மெற்றிக் தொன்கள்) கொண்டதொரு அதிகரிப்பைக் காட்டியது. தனியார் துறைக்கான வழங்கல்களில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டமையைத் தரவுகள் எடுத்துக் காட்டின. எனினும் கடந்த காலங்களைப் போன்றே தனியார்துறையில் வளமாக் கிப் பயன்பாடு தொடர்ந்தும் முதிர்ச்சியடையாத நிலங்களுக்கே பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தனியார்துறைப் பயிர்ச்செய்கையாளர்கள் முதிர்ச்சி யடைந்த இறப்பர் நிலங்களுக்கு வளமாக்கியைப் பயன்படுத்தத் தூண்டப்பட்டா லொழிய அவர்களின் நிலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமான உற்பத்தியை எட்டுவது பெரும்பாலும் முடியாத காரியமாக இருக்கும்.

தற்காலிகத் தரவுகளின்படி இவ்வாண்டுக் காலத்தின் மீள்நடுகை செய்யப் பட்ட மொத்த நிலப்பரப்பு 14 சதவீதத்தால் அல்லது 5,530 எக்டேயர்களால் உயர்வடைந்தது. இது முக்கியமாகத் தனியார்துறை நிலங்களில் குறிப்பிடத் தக்களவில் மீள்நடுகை அதிகரித்தமையால் ஏற்பட்டது. மூன்று முக்கிய உற்பத்தி மாவட்டங்களான கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில் இறப்பர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அதிகரித்த மீள் நடுகை தனியார்துறையின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கு மாருக அரசதுறைப் பெருந்தோட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்ட இணைந்த பரப்பு 6 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.12

## இறப்பர் புள்ளி விபரங்கள் 1982—1984

| விடயம் | அலகு | 1982 | 1983(அ) | 1984(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 125 | 140 | 142 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர் | 205.7 | 205.6 | 205.6 |
| 2.2. பால் எடுக்கும் ... | கி. கி. /எக்டேயர் | 170.7 | 170.5 | 168.9 |
| 3. விளைச்சல் ... | ,, | 729 | 818 | 840 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ. தொன்கள் | 16.5 | 18.6 | 23.5 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 5,866 | 4,862 | 5,530 |
| 6, விலைகள் ... | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. ஏ. பெ. ... | ரூ. / கி. கி | 17.68 | 22.77 | 26.16 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 10.18 | 13.95 | 14.40 |
| 7. உற்பத்திச் செலவு (இ) ... | ,, | 9.66 | 9.90 | 11.23 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 131.3 | 125.2 | 126.2 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 16.4 | 16.4 | 15.1 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 2,323.0 (101) | 2,852.0 (114) | 3,301.0 (127) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சத வீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) ... | | 2.1 | 2.1 | 2.2 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அரசதுறை, தோட்டங்கள், தனியார்துறை தோட்டங்களினதும் சிறு உடைமையாளர்களினதும் உற்பத்தியில் கணிக்கப்பட்ட சராசரி செலவு.
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

புதிய பயிரிடுகை, 1983 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1984 இல் 28 சதவீதம் அல்லது 482 எக்டேயர்கள் கொண்ட வீழ்ச்சியை அடைந்ததன் மூலம் கடுமையான பின்னடைவிற்கு ஆளானது. மிகக் கவர்ச்சிகரமான தேயிலை விலைகள் இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்ததாகத் தோன்றுகின்றது. உண்மையில் சில பகுதிகளில் இறப்பர் நிலங்களைத் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு மாற்றும் நோக்குடன் இறப்பர் மரங்கள் பிடுங்கப்பட்டதாகத் தெரிகிறது. மீள் நடுகை, புதிய நடுகை இரண்டிற்குமான உதவு தொகை வீதங்கள் இவ்வாண்டுக்காலத்தில் மாற்றமின்றியிருந்தன. எனினும் சிக்கனமற்ற இறப்பர் நிலங்களில் தேயிலையைப் பயிரிடுவதற்கான உதவு தொகை வீதம் எக்டேயரொன்றிற்கு ரூ. 11,740 இல் இருந்து 1984 ஒற்றோபரிலிருந்தும் எக்டேயர் ஒன்றிற்கு ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டது.

அரசதுறைப் பெருந்தோட்டங்கள் தனியார் துறைப் பயிர்ச்செய்கையாளர் இருவரும் இவ்வாண்டுக் காலத்தில் இறப்பரின் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டனர். எனினும் அரசதுறைப் பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் அதிகரிப்பு வீதம் மிக உயர்வாக இருந்தது. இதற்கு 1984 ஏப்பிறலிலிருந்து வழங்கப்பட்ட கூலி உயர்வும், பெருந்தோட்டங்களில் ஆண், பெண்களுக்கான கூலிகள் சமமாக்கப்பட்டமையும் காரணமாகும். வழங்கப்படும் வேலை நாட்களின் எண்ணிக்கையை உத்தரவாதப்படுத்தும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டமையும் உற்பத்திச் செலவின் அதிகரிப்பிற்குக் காரணமாகியது. தனியார் துறையும், சிறு உடைமையாளர்களும் கூலி வீதங்களை அரசதுறைப் பெருந்தோட்டங்களின் கூலி வீதங்களுக்குக் கீழே முக்கியமாக நியாயமான மட்டங்களில் பேணியமையின் காரணமாக உற்பத்திச் செலவில் அதிகரிப்பினைக் கட்டுப் படுத்தக் கூடியவர்களாக இருந்தனர்.

இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) (அனைத்துத் தரங்களும்) 1984 இல் 15 சதவீதத்தால் உயர்ந்ததுடன் ஆர். எஸ். எஸ். 1 இன் கொழும்பு ஏல விலையும் 3 சதவீதத்தால் உயர்வடைந்தது. எனினும் இவ்வதிகரிப்பு, இவ்வாண்டுக் காலத்தில் உற்பத்தியாளர் இலாபங்களில் உயர்ந்து செல்லும் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட பாதகமான தாக்கத்தை எதிரீடு செய்யப் போதுமானதாக இருக்கவில்லை.

இலாப அளவு பாதிப்படைந்து சென்றமையால் அரசு, புதிய படிப்படியாக அதிகரிக்கும் அளவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வையை 1984 யூலையில் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ. 2 ஆல் குறைத்தது. மேலும் 1984 நவெம்பரில் இலாப அளவுகளை அதிகரிக்கும் நோக்குடன் அரசு வரி வீதங்களைத் திருத்தியமைத்துப் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் வரி மதிப்பு முறைக்கான தொடக்க விலையை ஆர். எஸ். எஸ். I இலிருந்து ஆர். எஸ். எஸ். II இற்கு மாற்றியது. உற்பத்தியாளர் விலைகளை ஏறத்தாழ கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ. 2.25 ஆல் உயர்த்துமென எதிர்பார்க்கப்பட்டது. சந்தையில் நிறைவற்ற தன்மையினதும், ஏனைய காரணிகளினதும் காரணத்தால் உற்பத்தியாளர்களுக்கான இலாப எல்லைகள் ஈடுசெய்யத்தக்க ரீதியில் அதிகரிக்கவில்லை.

இறப்பர் பயிர்ச்செய்கையிலும் பதனிடுவதிலும் தனியார்துறையினர் முன்னிலையில் விளங்குவதனால் தற்போது அதிகளவு பிரச்சினைகளைக் கொண்டுள்ள தனியார்துறையினரின் செயலாற்றத்திலேயே இறப்பர் கைத்தொழிலின் நீண்டகால அபிவிருத்தி அதிகளவில் தங்கியிருக்கின்றது. பல சிறு உடைமையாளர்கள் பிழையான பாலெடுத்தல் முறைகளையும் பேணல் வழிமுறைகளையும் தொடர்ந்தும் பின்பற்றுகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சீரற்றதும் தளம்பலுள்ளதுமான மீள் பயிரிடல் செயலாற்றம் தனியார்துறையில் காணப்படும் முக்கிய குறைபாடாகும். எனவே இத்துறையில் ஒரே மாதிரியானதும் சீரானதுமான மீள் பயிரிடலை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற திருத்தங்களை மேற்கொள்வதற்காக உதவு தொகைத் திட்டம் உறுதியான மீளாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். அத்துடன், தரத்தை அதிகளவில் பாதிக்கும் செப்பமற்ற பதனிடல் முறைகளைப் பல சிறு உடைமையாளர்கள் தொடர்ந்து பின்பற்றுவதால் தனியார் துறையில் பதனிடல் வசதிகளை அதிகரிப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. இது தொடர்பாக, தொகுதி பதனிடல் நிலையங்கள் திட்டத்தின் முறையான விரிவாக்கமொன்றிற்கான கொள்கையை வேண்டி நிற்கின்றது. இத்திட்டமானது பயிர்ச்செய்கை, பதனிடல், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான உதவிகளை ஒன்றுபடுத்துவதற்காக மீள வடிவமைக்கப்பட வேண்டியிருக்கிறது.

இறப்பர் கைத்தொழிலைப் புத்தாக்கம் செய்வதில் அரசதுறை தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இப்பெருந் தோட்டங்கள் தனியார்துறை நிலங்களை விடக் கணிசமானளவு உயர்வான சராசரி விளைச்சலைப் பதிவு செய்கின்றபோதிலும் அவற்றில் பெறப்பட்ட விளைச்சல் அவற்றின் இயலாற்றல் மட்டங்கட்கு மிகவும் கீழாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது. இது இத்துறையில் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் அரசுக்குச் சொந்தமான இறப்பர் நிலங்களின் உற்பத்தியில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 1983 இன் 164 இலட்சம் கிலோகிரும் களிலிருந்து 1984 இல் 151 இலட்சம் கிலோகிரும்களுக்கு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு, இறப்பரின் முதன்மை உள்நாட்டு நுகர்வோரில் ஒன்ருன ரயர் கூட்டுத்தாபனத்தின் சார்பு ரீதியில் குறைவான செயலாற்றமும் ஓரளவுக்குக் காரணமாகும். நாட்டில் இறப்பருடன் தொடர்புள்ள கைத்தொழில்கள் கடந்த சில ஆண்டுகளாகத் திருப்திகரமான வளர்ச்சியினைக் காட்டவில்லை.

தெங்கு

1984 இல் தெங்கு உற்பத்தியானது 19,820 இலட்சம் காய்களாக மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது 1977 இற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த அளவாகவுமிருந்தது. 1984 இல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3,310 இலட்சம் காய்களாக அல்லது 14 சதவீதமாகவிருந்தது. 1983 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1984 இன் முதலரைக் காலப்பகுதியில் உற்பததி யானது 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தவேளையில் இரண்டாவது அரைக் காலப் பகுதியில் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது 1983 இல் பெரும் பகுதியில் நிலவிய வரட்சி காரணமாக ஏற்பட்ட காலங் கடந்த பாதிப்பினைப் பிரதிபலித்தது.

தேங்காய் எண்ணெயும் தேங்காய்த்துருவல் உற்பத்தியும் இவ்வாண்டில் 1983 உடன் ஒப்பிடுகையில் முறையே 56 சதவீதத்தினலும், 25 சதவீதத்தினலும் அதிகளவிலான வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வீழ்ச்சிக்கு தேங்காய் உற்பத்தி யின் குறைந்த மட்டமும், உடன் காய்கள் வீட்டு நுகர்வுக்கு ப்பயன்படுத்தப் பட்டமையினைத் தொடர்ந்து பதனிடல் கைத்தொழிலுக்கான காய்களின்கிடைக் கும் தன்மை குறைவடைந்தமையும் ஓரளவிற்குக் காரணமாகும்.

தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1984 ஆம் ஆண்டிலும் தமது அதிகரிக்கும் போக்கினைத் தொடர்ந்து 40 சதவீதத்தினல் உயர்வடைந்தன. கடந்த ஆண்டில் அதிகரிப்பு வீதம் 18 சதவீதமாக மட்டுமே இருந்தது. இவ் வதிகரிப்பானது, முக்கியமாக 1983 இன் இறுதிக்காலத்திலும் 1984 ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்தும் நிலவிய சாதகமான வானிலைத் தன்மையினலும் இவ்வாண்டுக் காலத்தில் உள்ளூர்ச் சந்தைகளில் தேங்காய் விலைகளில் ஏற்பட்ட கடும் உயர்வினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரண்டு அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளினல் தொழிற்படுத்தப்பட்ட தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டமானது வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையிலும், பகிர்ந்தளிக்கப் பட்ட தொகைகளிலும் பெரும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்துள்ளது. 1984 இல் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை ஏறத்தாழ மும்மடங்காக அதிகரித்து 1,614 ஆகவும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை 1983 இன் ரூ. 52 இலட்சத்தி லிருந்து 1984 இல் ரூ. 135 இலட்சமாக அதிகரித்தன. வளமாக்கிக் கொடுகடனின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 1984 இன் நடுப்பகுதியில் இத்திட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட திருத்தங்களின் காரணமாக முன்னைய காலங்களில் ஆகக்கூடியது தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டதற்கு எதிராகத் தெங்குப் பயிர்ச் செய்கையாளர் ஆகக் கூடியது மூன்று வருடங்களுக்குக் கடன்களைத் தொடர்ச்சியாகப் பெறக்கூடியதாக இருந்தது.

அண்மைக் காலங்களில் தெங்கு புத்தாக்கம், மீளப் பயிர்ச்செய்கை, கீழ்ப் பயிர்ச்செய்கை, புதிய பயிர்ச்செய்கை என்பன தொடர்பான குறைந்த செயலாற்றம் 1984 இலும் தொடர்ந்தது. புத்தாக்கம் செய்யப்பட்ட பரப்பளவானது 1983 இல் 5,539 எக்டேயர்களிலிருந்து 1984 இல் 5,092 எக்டேயர்களாக 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மீளப்பயிர் நடுகை கீழ்ப் பயிர்ச்செய்கைப் பரப்பளவும் இவ்வாண்டில் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. புதிய பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு 1983 இன் 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1984 இல் 53 சதவீதத்தால் அதிகளவு வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. தெங்குப் பயிர்ச்செய்கைத் துறையில் மூலதன அபிவிருத்தி வேலைகளின் வீழ்ச்சியடையும் போக்கினைத் தடைசெய்யும் முகமாகப் புத்தாக்கம், மீளப் பயிர்நடுகை, கீழ்ப் பயிர்ச்செய்கை, புதிய பயிர்ச்செய்கை ஆகியவற்றின் உதவுதொகை வீதங்கள் 1984 சனவரி முதல் கணிசமானளவால் உயர்த்தப்பட்டன. எனினும் இந்நடவடிக்கைகள் திருத்தப்பட்ட உதவுதொகை வீதங்களினால் ஏற்படும் நன்மைகளை ஈடுசெய்யாவிடின் இத்திருத்தப்பட்ட வீதங்கள் செயலாற்றத்தில் காலங்கடந்த நன்மைகளை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது.

### அட்டவணை 1.13
### தெங்கு புள்ளி விபரங்கள் 1982—1984

| விடயம் | அலகு | 1982 | 1983 | 1984(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 2,521 | 2,313 | 1,982 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (இ) | 286 | 295 | 221 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (இ) | 820 | 663 | 289 |
| 1.3. உலர்த்திய தேங்காய் (ஈ) ... | ப. இ. காய்களில் (இ) | 19 | 18 | 12 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 9 | 6 | 4 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (உ) ... | ப. இ. காய்களில் | 1,367 | 1,373 | 1,441 |
| 2. சராசரி விலை | | | | |
| 2.1. கொழும்பு .. | காய்க்கு ரூபா | 1.60 | 2.42 | 4.07 |
| 2.2. ஏற்றுமதி க. எ. பெ. .. | காய்க்கு ரூபா | 3.32 | 3.66 | 6.48 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 30.2 | 35.7 | 50.0 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.57 | 0.60 | 0.63 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(ஊ) ... | எக்டேயர்கள் | 3,543 | 2,641 | 2,553 |
| 6. புதிய பயிரிடல் (ஊ) ... | எக்டேயர்கள் | 5,291 | 3,394 | 1,580 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் .. | ப. இ. ரூபா | 1,497 | 1,921 | 2,118 |
| | (சிஎஉ பஇ) | (65) | (76) | (81) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 1,003 | 1,409 | 1,553 |
| | (சிஎஉ. ப. இ.) | (44) | (56) | (59) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா) | 494 | 512 | 565 |
| | (சிஎஉ. ப. இ.) | (21) | (20) | (22) |
| 8. மொ. உ. உற்பத்தியில் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (எ) ... | | 4.1 | 3.8 | 4.4 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கை சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வு மொத்த உற்பத்தியுடன் கூட்டப்படுவதில்லை.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காத் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய்= 4,925 காய்கள்.

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்.

(உ) தலைக்குரிய வீட்டு நுகர்வு 1982, 1983ஆம் ஆண்டுகளுக்கு 90 காய்களெனவும் 1984ஆம் ஆண்டிற்கு 92.4 காய்களெனவும் கொண்ட அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(ஊ) விபரமான தரவுகள் இடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(எ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

அரசின் உதவுதொகைத் திட்டத்தின் கீழான தெங்கு நிலங்களிலான இடைப் பயிர்ச்செய்கை ஆண்டுக் காலத்தில் கலப்புச் செயற்பாட்டினைக் கொண்டிருந்தது. கோப்பி, கொக்கோ ஆகியவற்றுடனான இடைப்பயிர்ச்செய்கை முறையே 15 சதவீதத்தாலும் 50 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் மிளகு பயிரிடலானது 21 சதவீதத்தால் இவ்வாண்டுக் காலத்தில் அதிகரித்தது. பயிர்ச்செய்கையாளர்கள் பெரும்பாலும் குறுகிய பருவகாலத்தில் கூடிய இலாபத்தினைத் தரக்கூடிய பயிர் வகைகளையே விரும்புவதாகத் தெரிகின்றது. இடைப்பயிர்ச்செய்கையானது, பயிர்ச்செய்கையாளர்களுக்கு மேலதிக வருவாய்களை உருவாக்குவதுடன் தொழில்நிலை வாய்ப்புக்களையும் அதிகரித்து தேசிய பொருளாதாரத்திற்குக் கணிசமானளவு நன்மைகளை வழங்கியது. கடந்தகால ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்தச் செயல்முறைகளைச் செயற்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அத்தியாவசியமாகும். எனினும் இடைப்பயிர்ச்செய்கைக்கான உதவுதொகை கடந்த சில ஆண்டுகளாக மாற்றமின்றியிருந்துவந்துள்ளது. இதன் விளைவாக உதவுதொகைகளிலான உண்மையான நன்மைகள் செலவு அதிகரிப்புக்களினால் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டன. கடந்த ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு உதவுத்தொகைத் திட்டம் மிகவும் பயனளிக்கக் கூடிய விரிவுபடுத்தப்பட்ட பணிகளுடன் ஒன்றிணைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வரிவிதிப்பு அமைப்பானது 1984 நவெம்பரில் திருத்தியமைக்கப்பட்டது. தேங்காய் எண்ணெயின் ஏற்றுமதிகள் வரி விலக்குப்பெற்ற பண்ணை விலையானது மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ. 13,100 இலிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டதுடன் பண்ணை விலைக்கு மேலான விலைக்கு, 50 சதவீதம் கொண்ட ஒரே மாதிரியான வீதம் வலியுறுத்தப்பட்டது. அதே சமயம் தேங்காய்த்துருவல் ஏற்றுமதியில் அதன் ஆகக் குறைந்த ஏற்றுமதித் தீர்வையானது மெற்றிக் தொன் ஒன்றிற்கு ரூ. 3,500 இலிருந்து ரூ. 5,000 ஆகவும், உடன் காய்களின் ஏற்றுமதித் தீர்வை 1,000 உடன் காய்களுக்கு ரூ. 500 இலிருந்து ரூ. 1,000 இற்கும் உயர்த்தப்பட்டது. உலர்த்திய தேங்காய் மீதான ஆகக் குறைந்த தீர்வை எந்தவித திருத்தங்களுக்கும் உட்படவில்லை. இந்த மாற்றங்கள் பண்ணை விலையை 1,000 காய்களுக்கு ரூ. 600 இலிருந்து ரூ. 2,000 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

மேலும் நிலம் விரிவுபடுத்துவதற்கான நிலப்பற்றுக்குறையினால் தெங்குத் கைத்தொழில் அபிவிருத்தியானது, புதிய நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதைவிட உள்ள நிலங்களிலேயே உற்பத்தியை அதிகரிக்கும் ஆற்றலிலேயே அதிகம் தங்கியுள்ளது. மீளப் பயிரிடல் வரலாற்று ரீதியில் திருப்தியின்மையைக் கொண்டிருப்பதனால் தற்போதுள்ள மாற்றங்களின் குறிப்பிடத்தக்க விகிதம் உற்பத்தி வயதைக் கடந்துள்ளதால் சிறந்த பயிர்ச்செய்கை வழிமுறைகளை மேற்கொள்ளுதல் கடினமானதாகவுள்ளது. இதன்மூலம் பழைய பயிர்களைப் புதிய உயர் விளைச்சல் கொடுக்கும் பயிரினங்கள்மூலம் மாற்றியமைக்காவிட்டால் உற்பத்தியில் ஒரு திருப்புமுனையை எய்துவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

கடந்த அண்மைக்கால அனுபவங்கள் தெங்குத்துறை அபிவிருத்தியில் விலைக் கொள்கை வகித்துவந்த இன்றியமையாத பங்கினை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. விலைகளை உயரவிட அனுமதிப்பதன்மூலம் திறமையான பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றுவதன் பிரதிபலிப்பாகக் குறிப்பாக வளமாக்கியின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இத்தகைய சாதகமான விளைவினைப் பெறும்பொருட்டு உற்பத்தியாளர்களுக்கு விலைகளை முன்னேற்றுவதற்கான தொடர்பற்ற முயற்சிகள் வாய்ப்புக்கள் போதுமானதல்ல என்பதில் ஐயமில்லை. இத்துறையின் விலைக்கொள்கையானது கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டவாறு பயிர்ச்செய்கையாளர் தமது முதலீடுகளுக்கு ஏற்ற இலாபத்தினைப் பெறுகின்ற வகையில் அமைய வேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டுள்ளது. நுகர்வாளர்களுக்குக் குறுங்காலத்தில் நன்மையளிக்கும் விதத்தில் இவ்வாக்குறுதி தியாகம் செய்யப்படக்கூடாது. உற்பத்தியாளர்களுக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கும் சாதகமான உருவாக்கங்கள் நீண்ட காலத்தில் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகுந்த கவனத்திற்குரிய இன்னொரு விடயம் தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பமாகும். தேங்காயெண்ணெய் ஆலைக் கைத்தொழிலில் பாவனைக்குதவாத மிகப் பழமைவாய்ந்த பொறிகளுடன் கூடிய பெருமளவு எண்ணிக்கை கொண்ட சிறிய ஆலைகள், புதிய தொழில் நுட்பங்களுக்கான மீள் முதலீடுகளினை வேண்டி நிற்கின்றது. இதே வாய்ப்புத் தேங்காய்த் துருவல் கைத்தொழிலுக்கும் பொருந்தக் கூடியது.

ஏற்றுமதிக்கும் உள்ளூர் நுகர்விற்கும் கிடைக்கக்கூடிய உற்பத்தியை முன்னேற்றும்வகையில் அமையும் ஒரு குறுங்கால வழிமுறையாகத் தேங்காய்ப் பாலினை மிகவும் திறமையற்ற முறையாகிய கையினால் பிழியும் முறையிலிருந்து பொறிகளினால் பிழியும்முறைக்கு மாற்றுவது மேற்கொள்ளப்படக்கூடியதே. தொழில் நுட்ப வசதிகள் ஏற்கனவே நாட்டினுள்ளேயே கிடைக்கக்கூடியதாய் இருப்பதனால் இந்தத் துறையில் முதலீட்டாளரைக் கவரக்கூடிய தாராளமான ஊக்குவிப்பு வழிமுறைகள் தேவையானதாகும்.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மீதான உற்பத்திகளின் நம்பகரமான தரவுகள் இன்னமும் கிடைக்கப்பெறாமையினால் அளவீடுகள், இவ்வுற்பத்திகளின் பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்ற எடுகோளின்படி ஏற்றுமதி செய்யப்படும் அளவின் அடிப்படையில் இத்துறையிலான செயலாற்றம் அளவிடப்படுகின்றது. ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட குறிக்கப்பட்ட அதிகரிப்புக்கள், மிளகு, கோப்பி என்பவற்றின் உற்பத்தி 1984 இல் மிகுதியாக அதிகரித்திருந்தமையை எடுத்துக் காட்டுகின்றது. மிளகின் ஏற்றுமதி அளவு கிட்டத்தட்ட இருமடங்காகிய வேளையில் கோப்பியின் ஏற்றுமதிகளின் அளவு 1984 இல் 18 சதவீதத்தால் அதிகரித்தது. 1984 இல் கறுவாவினது ஏற்றுமதிகளின் அளவு 59 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் இது ஓரளவுக்குக் கடந்த ஆண்டில் ஒன்று சேர்க்கப்பட்ட கையிருப்புக்களைப் பயன்படுத்தியமையால் ஏற்பட்டதாகும். மிளகு, கோப்பி என்பவற்றைப் பொறுத்தமட்டில், பயன் தரத்தக்க பரப்பளவானது 1978–1981 காலப் பகுதியில் உயர்ந்த வீத இடைப்பயிர்ச்செய்கையின் பலனாக உற்பத்தியில் ஏற்பட்ட சாதகமான விளைவுகளின் காரணமாக அதிகரித்திருக்கக் கூடும். கறுவா ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மேம்பட்ட அதிகரிப்பானது மெக்சிக்கோ இலங்கையில் இருந்து இறக்குமதிகளை அதிகரித்ததன் விளைவாக ஏற்பட்டதாகும். ஏனினும் கராம்பின் ஏற்றுமதி அளவுகள் 45 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன், ஏலக்காய், கொக்கோ போன்றவற்றின் ஏற்றுமதிகள் முறையே 14 சதவீதத்தாலும், 27 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து உற்பத்தியில் ஓர் குறைப்பினைச் சுட்டிக்காட்டின.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆதரவுத் திட்டத்தின் கீழ் கொக்கோ, கோப்பி, மிளகு, கராம்பு போன்றவற்றின் கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப் பரப்புக்கள் 1984 இல் அபரிமிதமான அதிகரிப்பினைக் காட்டின. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயிரிடப்பட்ட நிலப் பரப்புக்களில் கொக்கோ 4 மடங்கு அதிகரிப்பினையும் மிளகு 56 சதவீத அதிகரிப்பினையும் கொண்டிருந்த வேளையில் கோப்பியும், கராம்பும் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் 34 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆதரவுத் திட்டத்தின் கீழ் மீள் நடுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பளவுகள் வேறுபட்ட தோற்றத்தைக் காட்டியதுடன் கொக்கோ பயிரிடப்பட்ட பரப்பளவு 40 சதவீதத்தால் குறைவடைந்ததும் கறுவாவும், ஏலக்காயும் முறையே 18 சதவீதத்தாலும்20 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன.

கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையிலும் குறிப்பிடப்பட்டவாறு பல சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான வளம் தெங்கு, இறப்பர் நிலங்களிலும் சிக்கனமற்ற தேயிலை நிலங்களிலும், குறிப்பாக நடுத்தர தேயிலை வளரும் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அரச, தனியார் பெருந்தோட்டத்துறைகள் இரண்டும், இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆற்றல் மிக்க வீதத்தில் இயங்க முடியும். கறுவா தவிர்ந்த இந்தப் பயிர் வகைகளுக்கு அரசு எந்தவித ஏற்றுமதித் தீர்வையும் விதிக்கவில்லை. கறுவாவிற்கும் பெயரளவிலான தீர்வையே விதிக்கப்பட்டது. 1984 பெப்புருவரியில், கூடிய ஊக்குவிப்புக்களை வழங்கும் முகமாக அதிகமான சிறு ஏற்றுமதிப் பயிர்களின் வர்த்தகத்திற்கான மொத்த விற்பனவு வரி நீக்கப்பட்டது. பெரும்பாலான பயிர் வகைகளில் உற்பத்திச் செலவு மிகவும் குறைவாக இருந்ததால் உற்பத்தியாளர்கள் போதுமானளவு இலாபத்தினைப் பெற்றனர். இதற்கு மாறாக இத்துறையின் பொதுவான செயலாற்றம் எதிர்பார்ப்புக்களிலும் மிகக் குறைவாகவே வீழ்ச்சியடைந்ததுடன் நியாயமான வளர்ச்சி வீதத்தைப் பேண முடியாமல் போயிற்று. வழங்கல் பக்கத்தில் அமைப்புக் காரணிகள் இத்துறையின் துரித வளர்ச்சிக்கான தடைகளை விதித்தன என்பது புலனாகின்றது. இதற்குத் தற்போது பயனளிக்கக் கூடிய பயிர் வகைகள் உயர்ந்த விளைச்சல்களைத் தரக்கூடிய தரம் வாய்ந்த இனங்களைக் கொண்டிருக்காததும் ஒரு காரணமாகும். எனவே, புதிய முதலீடுகளும் மீள முதலீடுகளும் எதிர்காலத்தில் நல்ல பயன்களைப் பெறுவதன் பொருட்டுத் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

## நெல்

1983 இல் 15 சதவீதத்தினால் என்றுமில்லாத உயர்மட்டத்திற்கு அதிகரித்த நெல் உற்பத்தி 1984 ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக இவ்வாண்டில் சிறியதொரு பின்னடைவிற்கு உட்பட்டது. குடித்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம் நெல் உற்பத்தி 24.2 இலட்சம் மெற்றிக் தொன்களென (1,160 இலட்சம் புசல் நெல் அல்லது 16.9 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி) மதிப்பிட்டிருக்கின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது உற்பத்தியில் 2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. எனினும் அளவுக்கு மிஞ்சிய மழை மற்றும் வெள்ளம் என்பனவற்றின் விளைவாக 1983–1984 பெரும்போகப் பயிர் கடுமையாகப் பின்னடைந்தமையின் காரணமாக இவ்வீழ்ச்சி முழுவதும் ஏற்பட்டமையால் ஆண்டுத் தரவுகள் ஒரு ஒழுங்கற்ற தன்மையையே காட்டின. இதற்கு மாறாக 1984 ஆம் ஆண்டிற்கான சிறுபோக உற்பத்தி மிக உயர்ந்த மட்டமான 10.6 இலட்சம் மெற்றிக் தொன்களை

அடைந்து (508 இலட்சம் புசல்கள்) முன்னைய சிறுபோக காலத்தில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியினைவிட 52 சதவீதம் கொண்ட அதிகரிப்பை எடுத்துக் காட்டியது.

1983—1984 பெரும்போக உற்பத்தி 13.6 இலட்சம் மெற்றிக் தொன்கள் (650 இலட்சம் புசல்) என மதிப்பிடப்பட்டிருப்பதுடன் இது முன்னைய பெரும் போக காலத்தின் உற்பத்தியினுடன் ஒப்பிடுகையில் 426,283 மெற்றிக் தொன்கள் (204 இலட்சம் புசல்) அல்லது 24 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது 1971 ஆம் ஆண்டிலிருந்தும் பெரும்போக காலத்தில் பதிவு செய்யப்பட்ட உற்பத்திகளிலே இதுவே மிகக்குறைவானதாக இருந்தது. இவ்வீழ்ச்சி மொத்த உற்பத்தியில் பெரும்போக உற்பத்தி தொடர்பான பங்கு 1983 இன் 72 சத வீதத்திலிருந்து 1984 இல் 56 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சி யடையக் காரணமாயிருந்தது.

## அட்டவணை 1.14
## நெல் புள்ளி விபரங்கள் 1983—1984

| விடயம் | அலகு | 1983 | | | 1984(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 583 | 241 | 824 | 606 | 384 | 990 |
| வளமாக்கி வழங்கல்கள்(ஆ) | '000மெ.தொன்கள் | 118 | 42 | 160 | 112 | 59 | 171 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 124 | 29 | 153 | 136 | 40 | 176 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 559 | 219 | 778 | 509 | 377 | 886 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிரும்கள் | 3,638 | 3,603 | 3,606 | 3,031 | 3,146 | 3,076 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000எக்டேயர்கள் | 495 | 194 | 689 | 451 | 336 | 787 |
| உற்பத்தி ... | '000மெ.தொன்கள் | 1,786 | 698 | 2,484 | 1,360 | 1,060 | 2,420 |
| ... | ('000புசல்கள்) | (85,594) | (33,433) | (119,027) | (65,154) | (50,814) | (115,,968) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை(ஈ) .. | '000மெ.தொன்கள் | 313 | 11 | 324 | 115 | 54 | 169 |
| இறக்குமதிகள் (நெல்லிற் குச் சமன்) ... | '000மெ.தொன்கள் | — | — | 123 | — | — | 26 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம், பேராதனை,
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்.

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில்மாறு பட்டதாகும் பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்ரோபர்-மாச்சு/எப்பிறல்). சிறுபோகத்தையும் (எப்பிறல்/மே-ஒகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக் களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஒகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோகத்தில் அறுவடை கொள்வனவு செய்தவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

எனினும் 10.6 இலட்சம் மெற்றிக் தொன்களென மதிப்பிடப்பட்ட சிறு போக உற்பத்தி சிறுபோக காலத்தில் என்றும் அடையப்படாத மிகவுயர்ந்த உற்பத்தி மட்டமாக விளங்கியதுடன் இக்குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெரும்

போக உற்பத்தியின் இழப்புக்களில் பெரும் பகுதியை ஈடுசெய்யக்கூடியதாகவும் இருந்தது. 1984 இன் சிறுபோகத்தில் ஏற்பட்ட உயர்ந்த உற்பத்திக்கு முக்கியமாக நெல்லை உற்பத்தி செய்யும் மாவட்டங்களின் பெரிய, சிறிய குளங்களில் போது மானளவு நீர் கிடைக்கத்தக்கதாக இருந்தமையினைத் தொடர்ந்து இம்மாவட்டங் களில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டமையே முக்கிய காரணமாகும். அத்துடன் நெல் வேளாண்மையாளர்களுடைய பெரும் போக அறுவடை மிகக் குறைவாக இருந்தமையின் காரணமாக அவர்கள் நெல் நிலங்களில் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதனைவிட நெற்செய்கைக்கே பெருமளவு முன்னுரிமை அளித்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் 1984 இல் 3,076 கிலோகிறும் களுக்கு 15 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்திருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. 1983—1984 பெரும்போகத்தின் சராசரி விளைச்சல் 3,031 கிலோகிறும்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது முன்னைய ஆண்டின் பெரும் போக காலத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாக இருந்தது.

சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி சிறுபோகத்திலும் தொடர்ந்தது. 1984 சிறுபோகத்தில் எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் 3,146 கிலோ கிறும்களாக மதிப்பிடப்பட்டதுடன் 1983 இன் இதே காலத்தில் பதிவு செய்யப் பட்ட 3,603 கிலோகிறும்களைவிட 13 சதவீதம் (457 கிலோகிறும்கள்) குறை வானதாகவும் இருந்தது. அனைத்து உற்பத்திப் பிரதேசங்களும் (பெரிய, சிறிய நீர்ப்பாசனங்கள் மற்றும் மழை மூலம் நீரைப்பெறும் பிரதேசங்கள்) குறைந்த சராசரி விளைச்சலைப் பதிவு செய்ததுடன் பெரிய நீர்ப்பாசனப் பிரதேசங்கள் மிகவுயர்ந்த வீழ்ச்சியான 13 சதவீதத்தைப் பதிவு செய்தன. 1984 இன் சிறு போகத்தில் ஏற்பட்ட இம்மிகக்குறைந்த விளைவுச் செயலாற்றம் கிருமிகொல்லி, நோய்களின் பெருமளவு தாக்கம், குறிப்பிட்ட சில பிரதேசங்களில் பெய்த காலந் தவறிய மழை, தரம் குறைந்த விதைகள் பயன்படுத்தப்பட்டமை, பொருத்தம் குறைந்த நிலங்களுக்குப் பயிர்ச்செய்கை விரிவாக்கப்பட்டமை, நிலத்தின் அல கொன்றிற்கான வளமாக்கிப் பயன்பாடு வீழ்ச்சியடைந்தமை ஆகியவற்றின் இணை ந்த விளைவால் ஏற்பட்டதாகும்.

1984 ஆம் ஆண்டுப் பகுதியில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 165,922 எக்டேயர்களால் அல்லது 20 சத வீதத்தினுல் அதிகரித்தது. இது 1984 சிறுபோகத்தில் விதைக்கப்பட்ட பரப்பில் ஏற்பட்ட 59 சதவீதம் கொண்ட அதிகரிப்பின் முக்கிய விளைவாகும். பெரும் போகத்தில் விதைக்கப்பட்ட பரப்பளவு 4 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்தது.

1984 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 14 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப் பரப்பு 9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 72 சதவீதத்தினுல் குறிப்பிடத்தக்க விதத் தில் முன்னேற்றமடைந்தமை பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியை விஞ்சத்தக்க விதத்தில் எதிரீடு செய்ததுடன் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பின் தேறிய அதிகரிப்பிற்கும் வழி வகுத்தது. சிறுபோக காலத்தில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பும் மொத்த உற்பத்தியின் மீதான சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியினது பாதகமான தாக்கத்தைக் குறிப்பிடத்தக்களவில் குறைப்பதாகவும் இருந்தது. 1984 இல் விதைக்கப்பட்ட நிலத்திற்கும் அறுவடை செய்யப்பட்ட நிலத்திற்கும் இடையிலான வேறுபாடு

104,402 எக்டேயர்களாக அல்லது விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 11 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டில் இவை தொடர்பான எண்தொகைகள் 47,461 எக்டேயர்களாக அல்லது இவ்வாண்டில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக விளங்கியது. எனினும் 1983–1984 பெரும்போக காலத்தில் பயிர் அழிவுற்ற பரப்பின் அளவு மிகக் கூடியளவாக விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் 16 சதவீதமாக இருந்ததுடன் சிறுபோக காலத்தில் ஏற்பட்ட அழிவு மிகக் குறைவாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 2 சதவீதமாக விளங்கியது.

1984 பயிர்ச்செய்கையாண்டின் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தினுல் அல்லது 11,500 மெற்றிக் தொன்களால் அதிகரித்தது. 1983–1984 பெரும்போக காலத்தில் வழங்கல்கள் 5 சதவீதத்தினுல் அல்லது 6,000 மெற்றிக் தொன்களினுல் வீழ்ச்சியடைந்தமைக்கு இப்பருவகாலத்தில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளே காரணம் ஆகும். இப்பருவகாலத்தில் விதைக்கப்பட்ட எக்டேயர்கள் ஒன்றிற்கு வழங்கப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவும் 9 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 1984 இன் சிறுபோக கால வழங்கல்கள் முன்னைய சிறுபோக காலத்தினைவிட 42 சதவீதத்தினுல் அல்லது 17,500 மெற்றிக் தொன்களால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. எனினும் கடந்த ஆண்டின் இதே பருவ காலத்துடன் ஒப்பிடுகையில் விதைக்கப்பட்ட எக்டேயர் ஒன்றிற்கு வழங்கப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவு 11 சதவீதத்தினுல் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபையின் நெற் கொள்வனவு 1984 ஆம் ஆண்டுப் பகுதியில் 169,160 மெற்றிக் தொன்களாக (8,106 ஆயிரம் புசல்களாக) விளங்கி 1983 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளுடன் ஒப்பிடுகையில் 48 சதவீதம் கொண்ட கணிசமானளவு வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. முன்னைய ஆண்டுகளைப் போன்று தனியார் துறை வகித்த பங்கு மிகத் தீவிரமாக இருந்தமையே கொள்வனவில் ஏற்பட்ட இக்குறைவிற்குக் காரணமாக இருந்தது. கொள்வனவில் பெரும் பங்கை அளிக்கும் பெரும்போக காலத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இவ்வீழ்ச்சிக்கு உதவிய காரணியாக இருந்தது. அத்துடன் குறிப்பிட்ட சில வட பகுதி மாவட்டங்களில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலைகளின் காரணமாக அப்பிரதேசங்களில் நெற்சந்தைப்படுத்தும் சபை அதன் வழமையான கொள்வனவுத் தொழிற்பாடுகளை மேற்கொள்ள முடியாமலும் இருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே 1984 ஆம் ஆண்டுப் பகுதியின் கொள்வனவுகளில் பெரும்பகுதி (88 சதவீதம்) வரண்ட பிரதேச வலயமிகை மாவட்டங்களில் குறிப்பாக அநுராதபுரம் (30,801 மெற்றிக் தொன்கள்) அம்பாறை (29,783 மெற்றிக் தொன்கள்) மட்டக்களப்பு (25,054 மெற்றிக் தொன்கள்) திருகோணமலை (22,598 மெற்றிக் தொன்கள்) ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

1984 ஆம் ஆண்டு முழுவதும் திறந்த சந்தை விலைகள் புசலொன்றின் உத்தரவாத விலையான ரூ. 62.50 (கிலோகிருமொன்றிற்கு ரூ. 2.99) இற்கு மேலாகவே தொடர்ந்தும் இருந்ததுடன் திறந்த சந்தையின் மாதாந்த சராசரி விலைகள் புசலொன்றிற்கு ரூ. 78.00 (கிலோகிருமொன்றிற்கு ரூ. 3.73) எனக் கணிக்கப்பட்டது. எனினும் சராசரி திறந்த சந்தை விலைகளுக்கும் உத்தரவாத விலைகளுக்குமிடையிலான வேறுபாடு 1984 இன் முன்னரைப் பகுதியில் புசலொன்றிற்கு ரூ. 15.00 இலிருந்து (கிலோகிருமொன்றிற்கு ரூ. 0.72)1984 இன்

பின்னரைப் பகுதியில் புசலொன்றிற்கு ரூ. 16.50 இற்கு (கிலோகிருமொன்றிற்கு ரூ. 0.79) உயர்வடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் நெல்லின் திறந்த சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு மிகக் குறைந்த பெரும்போக அறுவடையின் பாதகமான தாக்கத்தின் தொடர்ச்சியாக நிரம்பல் சூழ்நிலையில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. 1984 இல் திறந்த சந்தை விலைகள் முன்னேற்றமடைந்தபோதும் முக்கிய உற்பத்தி மாவட்டங்களில் 15 சதவீதத்தையும் விஞ்சிக் காணப்படும் உற்பத்திச் செலவின் அதிகரிப்பு உற்பத்தியாளர் இலாபங்களைக் குறைத்தது. இந்நோக்கில் 1983 மாச்சிலிருந்தும் புசலொன்றிற்கு ரூ. 62.50 ஆக நிலையாக இருந்த உத்தரவாத விலையின்மேல் நோக்கிய திருத்தம் அவசியமானதாக இருக்கின்றது.

தற்பொழுது, நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் சீரான தொழிற்பாட்டிற்கு உணவு ஆணையாளரின் நடவடிக்கைகளிலேயே பெருமளவிற்குத் தங்கியிருந்தது. எனினும் உணவு முத்திரைத் திட்டத்தின் காரணமாக ஏற்படும் கேள்வியை ஈடுசெய்யும் நிச்சயமான கடப்பாடு உணவு ஆணையாளருக்கிருப்பதனல் இதன் பொருட்டு அரசின் உறுதியான வர்த்தக இருப்பினை அவர் பேணவேண்டியுள்ளதன் விளைவாக உறுதியற்ற நிரம்பல் மூலங்களில் உணவு ஆணையாளர் தங்கியிருக்க முடியாது. இதனுல் இவ்விரண்டு நிறுவனங்களினதும் ஆற்றல் மிக்க தொழிற்பாட்டிற்கு அவர்களது நடவடிக்கைகளைப் பெரும்பாலும் மிகச் சிறந்த முறையில் இணைப்பது இன்றியமையாதது போல் தோன்றுகின்றது. நெற் கொள்வனவிற்கும் அரிசி சந்தைப்படுத்தலுக்குமிடையிலான அத்தகைய இணைப்பினை இவ்விரண்டு தொழிற்பாடுகளையும் ஒரு நிறுவனத்திற்குள் ஒருங்கிணைப்பதன்மூலம் உறுதிப்படுத்தலாம். நெற்சந்தைப்படுத்தும் சபை பண நிரம்பலின்மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கும் மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதிகளில் தங்கியிருப்பதன் காரணமாக நாணய முகாமை நோக்கிலும்கூட இந்நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

நெல்லில் நாடு தன்னிறைவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதனுல் உள்ளார்ந்த வளம் குறைந்த நெல் நிலங்களை ஏனைய பயிர்களுக்குப் பன்முகப்படுத்தக் கூடிய முறைகள் பற்றிய துறையில் அவசியமான கொள்கை வகுப்பினை மேற்கொள்வது இன்றியமையாததாகத் தேவைப்படுகின்றது. அத்துடன் முன்னைய ஆண்டறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதனைக் குறைக்கும் பொருட்டு அரிசி, மா ஆகியவற்றின் தொடர்பான விலைகளில் பொருத்தமான மாற்றங்களையும், அரிசி மாவின் வர்த்தக உற்பத்தியை விரிவாக்குவதன்மூலமாகக் கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவைப் பயன்படுத்துவதைப் படிப்படியாக ஊக்குவித்தல் நன்மைபயப்பதாக இருக்கும்.

### சிறு உணவுப் பயிர்கள்

பெரும்போக காலத்தில் பல முக்கிய உற்பத்திப் பகுதிகளில் அளவுக்கதிகமான மழையினுலும் வெள்ளத்தினுலும் 1984 இல் சிறு உணவுப் பயிர்கள் துறை கடந்த சில ஆண்டுகளாகப் பதிவு செய்த சாதகமானவளர்ச்சியினைப் பேண முடியவில்லை. கிடைக்கக்கூடிய தற்காலிகத் தரவு சோளம், பாசிப்பயறு, உழுந்து ஆகியன நீங்கலான பல சிறு உணவுப் பயிர்களின் கீழுள்ள நிலப்பரப்பின் அளவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றது. பெரும்போக பயிர்கள் மேலதிக மழையினுலும் வெள்ளத்தினுலும் பாதிக்கப்பட்டமையால் இப்பயிர்ச்செய்கை ஆண்டில் உற்பத்தி கணிசமாக வீழ்ச்சியுற்றது. பெரும்போக பயிரின் அழிவு சிறுபோக

பயிர்ச்செய்கையிலும் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. சிறுபோக பயிர்ச்செய்கைக்கான விதை பொருள்கள் நேரத்திற்குக் கிடைப்பதில் பல வேளாண்மையாளர்கள் சிக்கல்களை எதிர்நோக்கினர். சிறுபோக பயிர்ச்செய்கையைப் பாதித்த இன்னுமோர் காரணி 1983–1984 பெரும்போக நெல் அறுவடையில் ஏற்பட்ட அழிவாகும். இது நீரின் அதிகளவு கிடைத்தலுடன் இணைந்து சிறு போகத்தில் சிறு உணவுப் பயிர்களின் கீழுள்ள நிலப்பரப்பின் அளவைக் குறைத்து நெல் பயிர்ச்செய்கைக்கு மாற்றுவதற்குப் பல வேளாண்மையாளர்களைத் தூண்டியது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்படும் எட்டு சிறு உணவுப் பயிர்களுக்கான கீழ்மட்ட விலைத்திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. சோளம், பாசிப்பயறு, உழுந்து ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட விலைகள் 1983/1984 பெரும்போகத்திலிருந்து உயர்த்தப்பட்ட வேளையில் ஏனையவை முன்னைய ஆண்டின் மட்டத்தில் தொடர்ந்திருந்தன. கீழ்மட்ட விலைத்திட்டத்தின் கீழ் நெல் சந்தைப்படுத்தல் சபையின் சோளத்தின் கொள்வனவுகள் இருமடங்கிற்கும் மேலான அதிகரிப்பைப் பதிவு செய்தன. எனினும் முன்னைய ஆண்டின் கணிசமான அதிகரிப்புக்கு மாறாக, சோயாஅவரைக் கொள்வனவு 1983 இன் 3,749 மெற்றிக் தொன்களிலிருந்து 1984 இல் 200 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது.

சிறு உணவுப் பயிர்த் துறையின் விரைவான அபிவிருத்தியின்மீது பல கடுமையான தடைகள் உள்ளனவாகத் தோன்றுகின்றது. இத்தடைகள் போதியளவு விரிவாக்க பணிகள் இன்மை, உயர் விளைவைக் கொடுக்கும் விதை இனங்கள் போதிய அளவில் கிடையாமை, குறைந்த உற்பத்தியாளர் இலாபங்களை நோக்கிச் செல்லும் அதிகளவு நிறைபோட்டியில்லாச் சந்தை அமைப்பு, நிறுவன கொடுகடன் வசதிகளைச் சுலபமாக அடைய முடியாமை ஆகியவற்றை உள்ளடக்கும். இக் காரணிகளின் ஒன்றுசேர்ந்த விளைவு நிலக்கூறு ஒன்றுக்கான குறைந்த உற்பத்தித்திறனும் குறைந்த விளைச்சலும் ஆகும். சிறு உணவுப் பயிர் உற்பத்தியினைக் கூடியளவு விளைச்சலின் மூலமாக விரிவுபடுத்துவதற்குப் போதியளவு வாய்ப்புகளுள்ளபோதிலும் இத்தடைகள் குறைக்கப்பட்டாலோ அல்லது நீக்கப்பட்டாலோ மட்டுமே இவ்வாற்றல் பெறப்படக் கூடியதாக இருக்கும். ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி வழிமுறை ஒன்றினை இத்துணைத்துறைக்காக அமைக்க வேண்டியதற்கான தேவையை இது ஏற்படுத்துகின்றது. நாடு நெல்லில் சுயதேவையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதன் காரணமாக நெல்லிற்கான கொள்கையும் அதன் நடைமுறைப்படுத்தலும் இப்பயிர்களுக்கும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

**சீனி**

1984 இல் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபன சீனி உற்பத்தி (உணவு ஆணையாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கழிவு செய்யப்பட்டவற்றிலிருந்தான உற்பத்தி தவிர) 18,301 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 15 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இங்குரானை, கந்தளாய் ஆகிய இரு தொழிற்சாலைகளிலும் பதிவு செய்யப்பட்ட உற்பத்திகள் இவ்வாண்டில் திருப்தியற்றனவாக விளங்கின. இங்குரானைத் தொழிற்சாலை உற்பத்தியில் 14 சதவீத வீழ்ச்சியினையும் கந்தளாய்த் தொழிற்சாலை 16 சதவீத வீழ்ச்சியையும் காட்டின. இக்குறைவான செயலாற்றம் முக்கியமாகக் கரும்புச் செய்கைக்குத் தேவையான நீர்ப்பாசன நீர் போதாமையினால் தயாரிப்பிற்கான கரும்பின் நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகும்.

இங்குராணைத் தொழிற்சாலையினுல் முகாமைப்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கையின் கீழுள்ள நிலப்பரப்பு (நாட்டப்பட்டதும் முளைவிட்டதும்) 1984 இல் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் 20 சதவீதம் கொண்ட அதிகளவு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் வீழ்ச்சியின் நேரடி விளைவாகச் சராசரி விளைச்சல் சிறிதளவால் 1 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளதால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 19 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், அரசுக்குச் சொந்தமான நிலங்களில் குறைவான உற்பத்திக்கு மாருகத் தனியார் துறை கரும்பு வளர்ப்போர்களால் வழங்கப்பட்ட கரும்பின் அளவு 28 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதன் விளைவால் 1984 இல் இங்குராணைத் தொழிற்சாலையில் பதனிடப்பட்ட கரும்பின் மொத்தத் தொகையின் 27 சதவீதத்திற்குத் தனியார் துறை வகை கூறியது. 1983 இல் இது 19 சதவீதமாகும்.

தொழிற்சாலையினுல் முகாமைப்படுத்தப்படும் நிலங்களில் உற்பத்தியாக்கப்படும் கரும்பிலேயே பெரும்பாலும் முற்ருகத் தங்கியிருக்கும் கந்தளாய் தொழிற்சாலையின் செயலாற்றம் ஓரளவுக்கு வேறுபட்டதாக விளங்கியது. கந்தளாயின் கீழுள்ள பயிரிடப்பட்ட கரும்பின் அளவு 10 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் அறுவடை செய்யப்பட்ட அளவு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சராசரி விளைச்சல் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 13 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளரின் கந்தளாய்த் தொழிற்சாலைக்கான கரும்பின் வழங்கல் 1984 இல் அதிகரித்தபோதிலும் மிகச் சிறிதளவாகவே தொடர்ந்துமிருந்தது.

சீனி பெறப்படும் வீதங்கள் இரண்டு தொழிற்சாலைகளிலும் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன. கடந்த காலத்தைப்போன்று இங்குராணைத் தொழிற்சாலை ஓரளவுக்கு அப்பகுதியில் நிலவிய கடுமையான நீர்ப்பிரச்சினையின் காரணமாகக் கரும்பின் தரம் குறைவடைந்தமையால் கந்தளாய்த் தொழிற்சாலையிலும் பார்க்கக் குறைந்தளவிலான பெறுகை வீதத்தைப் பதிவு செய்தது. ஏற்ற வடிகாலமைப்பு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டால் அன்றி இங்குராணைத் தொழிற்சாலையின் பெறுகை வீதம் தொடர்ந்தும் குறைவாகவே காணப்படும்.

சீனி இறக்குமதிக்காக நாடு ஆண்டுதோறும் கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணியைச் செலவிடுகின்றது. 1984 இல் சீனி இறக்குமதிச் செலவு ரூ. 13,460 இலட்சமாகக் காணப்பட்டது. தற்போது உள்நாட்டு உற்பத்திசீனியின் மொத்தத் தேவையின் ஏறத்தாழ 10 சதவீதத்தினை மட்டுமே ஈடுசெய்ய முடிகின்றது. கரும்புச் செய்கைக்கு ஏற்ற வேளாண்மைக் காலநிலையைக் கொண்ட, குறிப்பாக மொனருகலை மாவட்டம் போன்ற நாட்டின் குறிப்பிட்ட சில வரண்ட பகுதிகளில் உள்ள நிலங்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாமலும் குறைந்தளவு பயன்பாட்டினைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. எனவே இக்கைத்தொழிலில் முதலீட்டினை அதிகரிப்பதற்கு அரசு ஏற்கனவே முயற்சி எடுத்துள்ளதோடு தொடர்ந்தும் முயற்சி செய்கின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியினுல் நிதியிடப்பட்ட செவனகலவில் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலையில் 1985 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் உற்பத்தியைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டம் முழுமையாக அபிவிருத்தியடையும்போது ஆண்டுக்கு 4,500 எக்டேயர்களைக் கரும்புச் செய்கையின்கீழ் கொண்டுவந்து 27,000 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்யக்கூடியதாகவிருக்கும்.

தனியார் முதலீட்டினைக் கவரும் நோக்குடன் இக்கைத்தொழிலுக்கு அரசு கவர்ச்சிகர ஊக்குவிப்பு வழிமுறைகளை வழங்கியது. இதன் விளைவாக மூன்று பன்னாட்டு நிறுவனங்கள் அரசுடன் இணைந்து மூன்று புதிய தொழிற்சாலைகளை மொனராகலை மாவட்டத்தில் நிறுவுவதற்கு உடன்பட்டன. இவற்றில் வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனித் தொழிற்சாலை கரும்புப் பயிர்ச்செய்கைக்கான காணியைத் தயார்படுத்துவதிலும் தொழிற்சாலைக் கட்டிடத்தை அமைப்பதிலும் கணிசமானளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

சீனிக் கைத்தொழிலில் வெளிநாட்டு முதலீடுகள் மூலம் புதிய தொழில்நுட்ப முறைகள் கொண்டுவரப்படுவதனல் அவ்வாறன முதலீடுகள் நாட்டிற்குப் பயனுள்ளவையாகும். எனினும் அப்படியான முதலீடுகளைக் கவர்வதற்கு இறக்குமதி விலைகளுக்கும் அதிகளவில் உயர்வானதாக விளங்கக்கூடிய முன் தீர்மானிக்கப்பட்ட விலைகளில் கவரத்தக்க உள்நாட்டுச் சந்தையொன்றின் உத்தரவாதம் கொள்கை வகுப்போர்களின் முக்கிய கவனத்தை வேண்டுகிறது. அதே வேளையில் இங்குராணையிலும் கந்தளாயிலும் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் திறமையையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கான அவசர தேவையும் காணப்படுகின்றது.

### மீனும் கால்நடையும்

கடந்த சில ஆண்டுகளாகச் சாதகமான வளர்ச்சிப்போக்கினைக் காட்டிய கடற்றொழில்துறை 1984 இல் குறிப்பிடத்தக்க பின்னடைவைக் கண்டது. கடற்றொழில் அமைச்சு 1984 இல் மீன் உற்பத்தியின் தற்காலிக மதிப்பீடு 169,347 மெற்றிக் தொன்களாக மதிப்பிட்டதோடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 23 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வுற்பத்தி வீழ்ச்சி கரையோர கடற்றொழில்துறை, நன்னீர் மீன்பிடித்துறை ஆகிய இரண்டிலும் காணக்கூடியதாக இருந்தது. கரை கடந்த, ஆழ்கடல் மீன்பிடித்துறை உற்பத்தியும் 6 சதவீத அதிகரிப்பைக் காட்டியபோதிலும் முழுமையான நியதிகளில் அதிகரிப்பு 44 மெற்றிக் தொன்களாகச் சிறிதளவானதாகக் காணப்பட்டது.

மொத்த மீன்பிடியில் வழமையாக ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு வகைகூறும் கரையோரத்துறையின் உற்பத்திச் செயலாற்றம் மிகவும் ஏமாற்றத்தை அளிக்கக் கூடியதாயிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இத்துறையின் உற்பத்தி 26 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. எனினும் கடற்றொழில் நடவடிக்கைகள் உள்நாட்டுக் குழப்பங்களால் பாதிப்படைந்தது. வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களிலேயே இவ்வீழ்ச்சி பெரும்பாலும் முழுமையாகக் காணப்பட்டமையைக் குறிப்பிடுவது முக்கியமாகும். நன்னீர் மீன்பிடித்துறையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 12 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கடற்றொழிற்துறை உந்துமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவுதொகையின் மொத்தத் தொகை 1984 இல் 140 இலட்சமாக விளங்கியது. படகு உதவுதொகையாகவும் குள உதவுதொகையாகவும் முறையே ரூ. 20 இலட்சமும் ரூ. 16 இலட்சமும் வழங்கப்பட்டன. 1984 இல் இலங்கை வங்கி ''மாதல்'' (கரைவலை) கடற்றொழிலாளர்களுக்கான சிறப்புக் கொடுகடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் ''மாதல்'' வள்ள, கடற்றொழில் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக கடற்றொழிலாளர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூ. 100,000 வழங்கப்பட்ட வேளையில் வள்ளம் தொழில் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலுக்கும் மாற்றியமைத்தலுக்குமாக ரூ. 50,000 வழங்கப்பட்டது.

பல கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் 1984 இலும் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டன. இவை வட மேற்குக் கரை கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம், கிழக்குக்கரை கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம், மேற்குக் கரை கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம், கிரிந்த கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டம் ஆகியவற்றை உள்ளடக்கின. இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளின் பெரும்பகுதி வெளிநாட்டு மூலங்களினால் நிதியிடப்படுகின்றன. வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவும் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவும் சேர்ந்து பெரும்பாலும் இறால் பிடித்தலுடன் தொடர்புள்ள நான்கு கடற்றொழில் அபி விருத்திச் செயற்றிட்டங்களுக்கு அனுமதியளித்தன.

கடற்றொழில் துறையில் 1979–1983 காலப்பகுதியில் ஐந்தாண்டு அபிவிருத் தித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம் முயற்சிகள் இருந்த போதிலும், இத்துறையின் சராசரி செயலாற்றம் எதிர்பார்த்ததைவிடக் குறை வாகக் காணப்பட்டது. மீனின் நுகர்வு விலைகள் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்தும் அதிகரித்தன. அதிகரித்துச் செல்லும் கேள்விக்கு எதிராக நிரம்பலின் பற்றுக்குறையே இப்போக்கினை விளைவித்ததாகத் தோன்றுகின்றது. எனினும், நுகர்வு விலைகளில் காணப்படும் அதிகரிக்கும் போக்கின் நன்மைகளில் சிறிதாவது கடற்றொழிலாளிக்குக் கிடைக்குமோ என்பது ஐயத்திற்குரியது. கடற்றொழிலில் தொழில் புரியும் பெரும்பாலான மக்கள் மிக ஏழைகளாகவே மாற்றமின்றிக் காணப்படுவதைக் கிடைக்கத்தக்க தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே பொதுவாக உற்பத்தியாளரோ அல்லது நுகர்வோரோ இத்துறைக்குச் செய்யப் பட்ட முதலீடுகளின் நன்மைகளைப் பெற முடியவில்லை. நிறுவன அமைப்பினை முழுமையாக மீள ஒழுங்குபடுத்தலும் உதவுதொகைத் திட்டம் உட்பட ஊக்கு விப்புக்களிலும் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலும் மீளமைப்புச் செய்தலும் தேவைப்படுவதாகத் தெரிகின்றது. இத்துறையில் கடந்த அரசதுறை முதலீட்டின் முழுமையான மதிப்பீடு ஒன்று எதிர்காலத்தில் திறமையான கொள்கைகளை வகுத்தலுக்காக அவசரமாகத் தேவைப்படுவதாகத் தோன்றுகின்றது.

குடிமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் 1984 இற்கான தற்காலிக பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 3,270 இலட்சம் இலீற்றர்கள் என மதிப்பிடப் பட்டு 1983 இன் உற்பத்தியின் மேலாக 3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மாட்டுத் தீனின் உயர்ந்த விலைகளினால் கடுமையாகப் பாதிப்படைந்த உற்பத்தி யாளர் இலாப மட்டத்தின் வீழ்ச்சியைத் தடுக்கும் நோக்கில் தேசிய பாற்சபை 1984 செத்தெம்பரில் இருந்து பாலின் உற்பத்தியாளர் விலையை இலீற்றருக்கு 50 சதத்தினால் அதிகரித்தது. தேசிய பாற்சபை முன்னைய ஆண்டில் சேகரிக்கப் பட்ட தொகையைவிட 1984 இல் 2 சதவீதம் அதிகமாக 570 இலட்சம் இலீற்றர் கள் பாலைச் சேகரித்தது.

சிறப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களினூடாகக் கால்நடைக் கைத்தொழிலை அபிவிருத்தியடையச் செய்வதற்கான முயற்சிகள் 1984 இல் அரசினால் தொடர்ந் தும் செய்யப்பட்டன. இச்சிறப்புச் செயற்றிட்டங்கள் அநுராதபுரம் மாவட்ட வரண்ட வலய வேளாண்மைச் செயற்றிட்டம், இலங்கை–மேற்கு சேர்மனி ஆட்டு வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை சுவிஸ் கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை–ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 1984 இல் தற்காலிக முட்டையுற்பத்தி 5,610 இலட்சமாக மதிப்பிட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1 சதவீத சிறு வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது.

**கிராமியக் கொடுகடன்**

பல நிறுவனங்கள் கிராமியத் துறைக்குக் கொடுகடன் வழங்குகின்றன. இவை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி, இந்தியன் ஓவசீஸ் வங்கி, ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா ஆகியவற்றை உள்ளடக்கும். முன்னைய காலத்தைப் போன்றே அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகள் நடவடிக்கைத் துறையில் தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகித்தன. பல நிறுவனங்கள் வெவ்வேறு வழிகளில் ஈடுபட்டுள்ள போதிலும் இக்குறிப்பு முக்கியமாக மத்திய வங்கியால் தொடர்ந்தும் மீள் நிதியிடப்படும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், இலங்கை வங்கி, அட்டன் நெசனல் வங்கி ஆகியவற்றால் வழங்கப்பட்ட கடன்களையே கவனத்தில் எடுக்கின்றது.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 1,810 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 20 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 2,170 இலட்சமாக விளங்கியது. கொடுகடன் அளவில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு முக்கியமாக அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட தொகையின் 30 சதவீத அதிகரிப்பு (ரூ. 222 இலட்சம்) காரணமாகும். இலங்கை வங்கி 9 சதவீத (ரூ. 62 இலட்சம்) அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் அட்டன் நெசனல் வங்கி முன்னைய ஆண்டின் இதே காலத்தைவிட 21 சதவீத (ரூ. 75 இலட்சம்) அதிகரிப்பைப் பதிவு செய்தது. அதிகூடிய அதிகரிப்பு மக்கள் வங்கியால் பதிவு செய்யப்பட்டு அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தில் தனது சார்புப் பங்கினை 1983 இன் 41 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 45 சதவீதமாக உயர்த்தியது. எனினும் இலங்கை வங்கியின் சார்புப்பங்கு 1983 இன் 39 சதவீதத்திலிருந்து 1984 இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் அட்டன் நெசனல் வங்கி அதன் சார்புப்பங்கினை மாற்றமின்றிப் பேணியது.

1984 பயிர்ச்செய்கை ஆண்டில் நெற்பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ரூ. 1,763 இலட்சமாக விளங்கி முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம் உயர்வடைந்து இவ்வாண்டில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடனின் 81 சதவீதத்திற்கு வகை கூறியது. முன்னைய ஆண்டில் இதை ஒத்த நெற் கடனின் பங்கு 84 சதவீதமாகும். 1984 இல் அதன் நெற்கடனை ரூ. 162 இலட்சத்தால் அதிகரித்த மக்கள் வங்கி இவ்வாண்டின் நெற்கடன்களின் மொத்த அதிகரிப்பான ரூ. 236 இலட்சத்தில் 69 சதவீதத்திற்கு வகை கூறியது. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் மொத்த நெற்கடன்களில் மக்கள் வங்கியின் சார்பு ரீதியான பங்கு 1983 இன் 44 சதவீதத்திலிருந்து 1984 இல் 48 சதவீதமாக உயர்வடைந்தது. இலங்கை வங்கியால் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி முழுமையான ரீதியிலும் தொடர்பு ரீதியிலும் சிறிதளவாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.15

**அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் பயிர்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள்**
*(1984 திசெம்பர் 31 இல் உள்ளபடி)*

ப. இ. ரூபாய்களில்

| போகம்/ஆண்டு | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | | மொத்த கடன்கள் | | கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்வழங்கப் பட்ட மொத் தக்கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | |
| பெரும் போகம் 1982/83 ... | 50.8 | 3.7 | 54.5 | 45.1 | 9.7 | 54.8 | 28.3 | 4.0 | 32.3 | 124.2 | 17.4 | 141.6 |
| சிறு போகம் 1983 | 17.0 | 3.0 | 20.0 | 9.5 | 6.1 | 15.6 | 2.1 | 1.7 | 3.8 | 28.6 | 10.8 | 39.4 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1983 ... | 67.8 | 6.7 | 74.5 | 54.6 | 15.8 | 70.4 | 30.4 | 5.7 | 36.1 | 152.8 | 28.2 | 181.0 |
| பெரும் போகம் 1983/84 | 66.2 | 9.1 | 75.3 | 43.1 | 11.7 | 54.8 | 26.8 | 5.5 | 32.3 | 136.1 | 26.3 | 162.4 |
| சிறு போகம் 1984 | 17.8 | 3.6 | 21.4 | 14.3 | 7.5 | 21.8 | 8.1 | 3.3 | 11.4 | 40.2 | 14.4 | 54.6 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1984(அ) | 84.0 | 12.7 | 96.7 | 57.4 | 19.2 | 76.6 | 34.9 | 8.8 | 43.7 | 176.3 | 40.7 | 217.1 |

(அ) தற்காலிகத் தரவுகள்

மூலங்கள்: மக்கள் வங்கி,
இலங்கை வங்கி,
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி.

1984 பயிர்ச்செய்கை ஆண்டில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் நெற் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடனில் பெரும்போக நெற்கடன்கள் ரூ. 1,361 இலட்சத்திற்கு அல்லது 77 சத வீதத்திற்கு வகை கூறின. முன்னைய ஆண்டில் இதையொத்த பங்கு 81 சத வீதமாகும். பெரும்போக பயிர்ச்செய்கைக்காக மக்கள் வங்கி ரூ. 662 இலட் சத்தை வழங்கி முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 30 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. இதற்கு மாறாக இலங்கை வங்கியும் அட்டன் நெசனல் வங்கியும் முறையே 4 சதவீத, 5 சதவீத வீழ்ச்சிகளைக் காட்டின. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் 1984 சிறுபோகத்தில் நெற்பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 402 இலட்சமாகும். இது முன்னைய சிறுபோகத்தினைவிட 41 சதவீதம் கூடுதலாகக் காணப்பட்டதோடு இது இலங்கை வங்கி, அட்டன் நெசனல் வங்கி இரண்டினதும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களின் விளைவாகும். சிறுபோக நெல் பயிர்ச்செய்கைக்கு மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட தொகை முன்னைய சிறுபோக மட்டத்திலேயே ஏறத்தாழக் காணப்பட்டது.

1984 பயிர்ச்செய்கை ஆண்டில் சிறு உணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடனின் அளவு முன்னைய பயிர்ச்செய்கை ஆண் டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதத்தால் ரூ. 407 இலட்சத்திற்கு அதிகரித்தது. மக்கள் வங்கி இவ்வதிகரிப்பின் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகை கூறி சிறு உணவுப் பயிர்களுக்கான மொத்தக் கடன்களில் அதன் சார்புப் பங்கினை 1983 இன் 24 சதவீதத்திலிருந்து 1984 இல் 31 சதவீதத்திற்கு உயர்த்தியது.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப் பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களின் மீளப்பெறுகை 1984 இல் மோசமடைந்த தைக் காட்டியது. 1983–1984 பெரும்போகத்திற்கு வழங்கிய மொத்த நெற் கடன்களில் 64 சதவீதம் மாத்திரமே ஆண்டின் இறுதியில் மீளப் பெறப்பட்ட வேளையில் 1982–1983 பெரும்போக மொத்தக் கடனில் 73 சதவீதம் 1983 இறுதியில் மீளப் பெறப்பட்டது. இப்பாதகமான நிலையை பங்குபற்றிய எல்லா வங்கிகளிலும் காணக்கூடியதாக இருந்தது. பெரும்போக நெற் கடன்களின் மீளப்பெறுகையின் சார்புரீதியான குறைந்த செயலாற்றத்திற்குப் பெரும்பாலும் வெள்ளத்தாலும் மேலதிக மழையினாலும் பல பயிர்ச்செய்கைப் பகுதிகளில் பயிர் அழிவுகள் ஏற்பட்டமை பெருமளவு காரணமாகும்.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1977 சனவரி 1 ஆம் நாளிலிருந்து 1981 யூன் 30 ஆம் நாள் வரை வழங்கிய பயிர்ச் செய்கைக் கடன்களின் மீள அட்டவணைப்படுத்தும் திட்டத்தின் செயற்பாடு 1984 இல் தொடர்ந்தும் தாழ்ந்த நிலையிலே காணப்பட்டது. 1984 இல் இலங்கை வங்கி வேண்டுமென்று செலுத்தத் தவறிய பலர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதோடு இதன் விளைவால் இவ்வாண்டில் அவ்வாறான செலுத்தத் தவறியோர்களிடமிருந்து ஏறத்தாழ ரூ. 30 இலட்சத்தை மீளப் பெறக்கூடியதாக இருந்தது.

கிராமியக் கொடுகடன் துறையின் முதன்மைக் கொள்கை வகுக்கும் அமைப் பாக விளங்கும் கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபை இவ்வாண்டில் பல கூட்டங்களை நடாத்தியது.

பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவுவதற்கான சட்ட வரைவு இவ்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டது. மாத்தறையிலும், அநுராதபுரத்திலும், உள்ள இலங்கை மத்திய வங்கியின் இரு பிராந்திய அலுவலகங்களும் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை* முன்னேற்றும் நோக்குடன் அவற்றின் சிறப்பு வழங்கல் செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.

---

* மத்திய வங்கியின் கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளினதும் மாத்தறையிலும் அநுராதபுரத்திலும் உள்ள வங்கியின் இரு பிராந்திய அலுவலகங்களின் தொழிற்பாடுகளினதும் விபரங்கள் இவ்வறிக்கை பக்கம் xiv–xvii வரையிலும் பக்கம் xxii–xxxi வரையிலும் தரப்பட்டுள்ளது.